ymCA


# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா: 5-00

முரசு 05 ஒலி 248 ஆங்கீரச ஆடி 26 (10.08.1992) திங்கள்


## சடலங்களுக்கு அஞ்சலி ரூபவாஹினி ஒளிபரப்பு

கண்ணிவெடியில் பலியான இராணுவ அதிகாரிகளின் சடலங்கள் அவர்களது இல்லங்களில் வைக்கப்பட்டிருந்ததை ரூபவாஹினி ஒளிபரப்பியது. கொப்பேகடுவ, விஜய விமலரட்ன, ஜயமஹா ஆகிய அதிகாரிகளின் சடலங்கள் வைக்கப்பட்ட பிரேதப்பெட்டிகள் திறந்து வைக்கப்பட்டிருந்தன. எனினும் ஏனைய சில அதிகாரிகளின் சடலங்கள் வெளியில் தெரியாதவாறு பிரேதப்பெட்டிகள் மூடப்பட்டிருந்தன. பொதுமக்கள் மற்றும் அரச உயர் தலைவர்களும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் பலியான அதிகாரிகளுக்கு அஞ்சலி செலுத்துவதும் ரூபவாஹினி ஒளிபரப்பியது. இதனிடையே ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஒருநாள் தேசிய துக்கம் அனுஷ்டிக்குமாறு அரசை வேண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# யாழ் மீதான தாக்குதலை இன்று நடத்த கொப்பேகடுவ திட்டமிட்டிருந்தார்

### வெள்ளை கொடி

இராணுவ உயர் அதிகாரிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நேற்று கொழும்பின் பல பகுதிகளிலும், வீடுகளிலும் வெள்ளைக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

## நிலைமையை புதிய அதிகாரிகள் மீள ஆராய வேண்டியுள்ளது

யாழ்ப்பாணம் மீது இன்று தாக்குதலை ஆரம்பிக்கவே நேற்று முன்தினம் பலியான மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ திட்டமிட்டிருந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதற்கெனவே நேற்று முன்தினம் ஊர்காவற்றுறையில் அவர் தலைமையில் உயர் அதிகாரிகளின் இறுதிக் கட்டதிட்டங்களை ஆராயும் மாநாடு நடைபெற்றது எனக் கூறப்படுகிறது.

நடவடிக்கையை திட்டமிட்ட அதிகாரிகள் அனைவரும் மொத்தமாக பலியானது யாழ்ப்பாணம் மீதான தாக்குதலை தாமதப்படுத்தலாம் என அவதானிகள் தெரிவித்தனர்.

எனினும் டென்சில் கொப்பேகடுவவின் நடவடிக்கைத் திட்டத்தின் படி, புலிகளுக்கு எதிரான நடவடிக்கை தொடரும் என இராணுவ அதிகாரி ஒருவர் கூறியதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

கொப்பேகடுவ, விஜய விமலரட்ண ஆகிய இராணுவ தளபதிகளுக்கு பதிலாக புதிதாக எவர் நியமிக்கப்படினும் மிகவும் பயிற்சி பெற்ற அந்த தளபதிகள் இல்லாத போதை...

... 4 ஆம் பக்கம் பார்க்க

## டென்சில், விமலரட்ணாவின் இடங்களுக்கு தலுவத்தவும் ஜயவர்த்தனாவும் நியமனம்

நிலக்கண்ணிவெடியில் கொல்லப்பட்ட வடபகுதி தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ மற்றும் யாழ் குடாநாட்டுத் தளபதி பிரிகேடியர் விஜய விமலரட்ண ஆகியோரின் இடங்களுக்கு புதிய நியமனங்கள் உடனடியாகச் செய்யப்பட்டுள்ளன.

பிரிகேடியர் ரோஹன் தலுவத்த, பிரிகேடியர் அசோக ஜயவர்த்தன ஆகியோரே புதிதாக நியமிக்கப்பட்டுள்ளவர்கள்.

இந்த இரண்டு பிரிகேடியர்களும் உடனடியாக வடபகுதி சென்று கடமைப் பொறுப்புகளை ஏற்றுக் கொள்வார்கள் என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்ததாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

★ முன்னாள் விமானப்படை அதிகாரி

## புதிய இராணுவ மாற்றத்துடன் அரசியல் நடவடிக்கை வேண்டும்

"ஒட்டுமொத்தமாக இராணுவ அதிகாரிகள் [illegible] ... ரீதியான நடவடிக்கை ... இவர் ... இராணுவ நடவடிக்கை...

● முழு இராணுவ மரியாதையுடன்

## கொப்பேகடுவவின் இறுதிச்சடங்கு இன்று மாலை கனத்தையில்

நேற்று முன்தினம் கண்ணிவெடியில் பலியான ஸ்ரீலங்கா இராணுவ உயரதிகாரிகளின் உடல்களுக்கு நேற்று பிரதமர் டி.பி. விஜேதுங்க நேரில் சென்று அஞ்சலி செய்தார். இவருடன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கவும் சென்றிருந்தார்.

மேஜர் ஜெனரல் கொப்பேகடுவவின் உடல் றோஸ்மீட் பிளேசில் அவரது இல்லத்திலும் பிரிகேடியர் விஜய விமலரட்ணவின் உடல் கடவத்தையில் அவரின் இல்லத்திலும் கெப்டன் வன்சாதிலகவின் உடல் தெமட்டகொடவில் உள்ள அவரது இல்லத்திலும் வைக்கப்பட்டிருந்தன.

பொரளை ஜெயரட்ண மரணச்சடங்கு இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த கொமடோர் மோஹான் ஜயமஹாவின் உடலுக்கும் பிரதமர் அஞ்சலி செலுத்தினார்.

கொப்பேகடுவவின் உடலு...

... 4 ஆம் பக்கம் பார்க்க

## ஐலண்ட், ஒப்சேவர் பத்திரிகைகள் வெளியிட்ட செய்திகள்

அராலிச்சந்திப்பகுதிக்குவந்த இராணுவ அதிகாரிகள் பின்னர் அதிகாரிஒருவர் ஒன்றாக செல்வோம் என்று அழைத்து தையடுத்து ஒரு வாகனத்தில் சென்றபோதே கண்ணிவெடியில் சிக்கியதாக நேற்று சண்டே ஐலண்ட் பத்திரிகை எழுதியிருந்தது.

9 இராணுவ அதிகாரிகள் பலியான செய்தியறிந்த போது பிரதமர் டி.பி. விஜேதுங்க ஆஸ்பத்திரி ஒன்றை திறந்து வைக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்தார்.

அப்போது அவர் அங்கு உரையாற்றிய போது "உலகில் சிறிது காலமே இருக்கும் நாம் ஏன் ஒருவருடன் ஒருவர் மோதிக் கொல்கின்றோம் பொறாமைப்படுகின்றோம்" என தழுதழுத்த குரலில் குறிப்பிட்டதாக சண்டே ஒப்சேவர் செய்தி வெளியிட்டுள்ளது.

## வீரச்சாவு

அளவாயில் நேற்று முன் தினம் நடைபெற்ற மோதல்...

## தேசிய ரீதியில் அரசியல் தீர்வு தேவை -- ஜனாதிபதி

"வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்கு தேசிய ரீதியில் அரசியல் தீர்வு காணப்பட வேண்டியது அவசியம்"

கோனை நகர மண்டபத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ...

கூறினார். இந்த நிலைமையில் அரசியல் இயைபு மீட்ட எவரும் முற்படாததாலே இச் சண்டையினால், பலர் உயிரிழந்துள்ளனர். இதன் பாதிப்புகள் ஒரு தரப்பினரை மாத்திரம் ...

# புதிய இராணுவ மாற்றத்துடன் அரசியல் நடவடிக்கை வேண்டும்

"ஒட்டு மொத்தமாக இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டது பாரிய இழப்பு. இதனால் இழப்புகளுக்கு பதிலாக புதிதாக ஆளணிகளையும் இராணுவ தலைமையுடன் அரசியல் ரீதியான நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட வேண்டும்"

இவ்வாறு முன்னாள் விமானப்படை அதிகாரி ஹரி குணதிலக தெரிவித்துள்ளார். இவர் அண்மைக்காலமாக இராணுவ நடவடிக்கைகளை கைவிட்டு அரசியல் ரீதியில் பிரச்சினையை அணுகும்படி பகிரங்கமாக கோரி வருவது தெரிந்ததே.

# கண்ணிவெடி மர்மம் குறித்து விசாரணை நடத்தப்படுமாம்

நேற்று முன்தினம் அராலிச் சந்தியில் 9 இராணுவ அதிகாரிகள் பலியான காரணமான கண்ணிவெடி குறித்து இராணுவ விசாரணை நடத்தப்படவுள்ளது.

தீவுப்பகுதிகளுக்கு இராணுவம் வந்தபொழுது புலிகள் இக்கண்ணிவெடியை புதைத்துவிட்டுச் சென்றனரா அல்லது புதிதாகப் புலிகள் இப்பகுதியினுள் ஊடுருவி இக்கண்ணிவெடியை புதைத்தனரா என்பது குறித்து இதுவரை மர்மமாகவே இருப்பதாக இராணுவ வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

# 21 தமிழ் பொதுமக்கள் மட்டக்களப்பில் கொலை?

மட்டக்களப்பில் பின்தங்கிய கிராமம் ஒன்றில் 21 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் 10 பேர் காயமடைந்தனர் என்றும் இந்திய வானொலி தெரிவித்தது.

இராணுவ அதிகாரிகள் 9 பேர் பலியானதற்கு பழிவாங்கும் தாக்குதலாக இது இருக்கலாம் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

பிரதமர் டி. பி. விஜேதுங்க

## வீரச்சாவு

வல்லாயில் நேற்று முன்தினம் நடைபெற்ற மோதலில் லெப். ஆனந்தகுமார் (பா. தெய்வேந்திரம் சித்தன்கேணி) வீரச்சாவு எய்தினார்.

மட்டக்களப்பில் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் புலிகளின் தீவிர ஆதரவாளரான பு. பாலசிங்கம் (35) வீரச்சாவு எய்தினார்.

## அஞ்சலிக் கூட்டம்

தமிழீழப் போராட்டத்தில் இதுவரை ஆகஸ்ட் மாதத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களை நினைவு கூரும் அஞ்சலிக் கூட்டம் இன்று மாலை 7.30 மணிக்கு சண்டிலிப்பாய் நந்தன் விளையாட்டுக் கழகத்தில் நடைபெறவுள்ளது.

## நேற்று தாக்குதலில்லை

வடபகுதியில் உள்ள இராணுவ முகாம்கள் அனைத்தும் நேற்று அமைதியாக இருந்தன.

பூநகரி, மண்டைதீவு, பலாலி, தீவகப்பகுதி போன்ற இராணுவ முகாம்களில் இருந்து இராணுவத்தினர் எதுவித

... 4 ஆம் பக்கம் பார்க்க

"வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்கு தேசிய ரீதியில் அரசியல் தீர்வு காணப்பட வேண்டியது அவசியம்"

கேகாலை நகர மண்டபத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற கேகாலை ஐ.தே.க மாநாட்டில் உரையாற்றும்போது இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க அவர் பல தடவைகள் சகல அரசியல் கட்சிகளையும் அழைத்ததாகவும் கூறினார். இந்த நிலைமையில் அரசியல் இலாபம் தேட எவரும் முற்படக்கூடாது. இச்சண்டையினால் பலர் உயிரிழந்துள்ளனர். இதன் பாதிப்புகள் ஒரு தரப்பினரை மாத்திரம் பாதிப்படுத்தியதாக இருக்கவில்லை.

பிரச்சினைத் தீர்வுக்காக பாராளுமன்றத் தெரிவுக்குழுவும் சர்வகட்சி மாநாடும் நட

... 4 ஆம் பக்கம் பார்க்க

★ ஏ.எப்.பிக்கு திலகர்

# இராணுவ முயற்சிகளை இனியாவது கைவிடட்டும்

"இராணுவ நடவடிக்கைகள் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் என்ற எண்ணத்தை அரசு இப்போதாவது கைவிட வேண்டும் என புலிகளின் லண்டன் அலுவலகத்திலிருந்து தொலைபேசி மூலம் ஏ.எப்.பி. செய்தியாளருடன் தொடர்பு கொண்ட லோரன்ஸ் திலகர் தெரிவித்தார்.

புலிகளுடன் அரசு நிபந்தனையின்றி பேச்சு நடத்த முன்வர வேண்டும். போரினால் இரு மக்களும் பாதிப்படைகின்றனர் என அவர் மேலும் தெரிவித்ததாக வெரித்தாஸ் வானொலி குறிப்பிட்டது.

**ஆளுக் கொரு மரம் நடு**
**ஆயுள் நீள உறுதி எடு**

...வாக இணைப்புக் குழுவுக்கு க. சி. லோகேஸ்வரன் தலைவராக இருப்பார் என்று கொழும்பு நாளிதழ் ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளது.

வவுனியா முன்னாள் அரசாங்க அதிபரான இவர் தற்...

இவரை இத்தெரிவு குறித்து கடந்த வியாழக்கிழமை அமைந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ சில நிர்வாக நிலைமை பேச்சுவார்த்தை நடத்தியதாக அறியப்படுகிறது என்று இச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

...கிரிக்கெட் போட்டித் தொட... ...தோற்கடித்தது. 16

# யாழ். மாவட்ட இறைச்சிக்கடை

## உரிமையாளர் சமாச அறிவித்தல்

இறைச்சிக்கு வெட்டப்படும் கால்நடைகளைக் கொள்வனவு செய்வதில் ஏற்பட்டிருக்கும் பெரிய தட்டுப்பாடு காரணமாக யாழ். மாவட்ட இறைச்சிக்கடை உரிமையாளர் சமாசம் எடுத்துள்ள தீர்மானத்தை இறைச்சிப் பாவனையாளர்களுக்கு மிக்க வருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

இதன்படி வாரத்தில் புதன் - சனி - ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் யாழ் மாவட்டம் எங்கிலும் இறைச்சிக்கடைகள் திறந்து வியாபாரம் செய்யப்படும். திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளிக் கிழமைகளில் இறைச்சிக் கடைகள் திறக்கப்படமாட்டாது.

| தலைவர் | பொருளாளர் |
|---|---|
| மு. சிவானந்தராசா | பி. த. சிவலிங்கம் |

செயலாளர் :
க. சி. கிருஷ்ணன்

08015

# உதைபந்தாட்டப் போட்டி பாடுமீன் அணி வென்றது

உரும்பிராய் காந்திஜி சனசமூக நிலையம் நடாத்தும் 7 வீரர்கள் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில், குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழக அணி அதனை எதிர்த்து மோதிய பலாலி யூ. சென் அந்தோனிஸ் விளையாட்டுக் கழக 'பி' பிரிவு அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடக்க முதல் இறுதி வரை வெகு விறுவிறுப்பாக இருந்த இவ்வாட்டத்தில் குருநகர் பாடுமீன் அணி ஆட்டம் முடிவடைவதற்கு 7 நிமிடங்கள் இருக்கையில் ஒரு கோலைப் போட்டு தனது வெற்றியை நிச்சயப்படுத்திக் கொண்டது. இப் போட்டிக்கு நடுவராக ஏ. தேவராசா கடமையாற்றினார். (16)

# தனியார் கல்வி நிறுவன ஒன்றிய விசேட பொதுக்கூட்டம்

பண்டத்தரிப்புக் கோட்ட தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தின் விசேட பொதுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணி பண்டத்தரிப்பு சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

முக்கிய விடயங்கள் பல இக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட வேண்டியிருப்பதால் அனைத்து கல்வி நிறுவன இயக்குநர்கள் பிரத்தியேக வகுப்பு ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது இக் கூட்டத்திற்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வழங்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்கள் பற்றிய படிவங்கள் இதுவரை ஒப்படைக்காதவர்கள் தவறாது இக் கூட்டத்தில் ஒப்படைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. 18

# றெக்கிளமேசன் அணி சாம்பியனாகத் தெரிவு

திருநகர் சனசமூக நிலையத்தின் 31 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்டு வந்த உதைபந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் திருநகர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

றெக்கிளமேசன், உதயசூரியன் அணி அதனை எதிர்த்தாடிய தீவகம் இருதயராசா அணியை 5:1 என்ற கோல் அடிப்படையில் வென்று சாம்பியனானது. நடுவராக எம். பிரான்சிஸ் கடமையாற்றினார். (47)

# போலிக் கையெழுத்து வேட்டை என்கிறார் ஜனாதிபதி

அரசாங்கத்துடன் முன்னர் இருந்த சில பகுதியினரும் எதிர்ச் செயற்பாடுகளில் முனைப்புக் காட்டி வருகின்றனர். தேசிய நிலையிலான தேர்தல்களில் நம்பிக்கையில்லாத இவர்கள் இப்போது போலிக் கையெழுத்து வேட்டையில் இறங்கியுள்ளனர்"

இவ்வாறு ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ மொறட்டுவையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

# சனசமூகநிலையம் புனரமைப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் பல ஆண்டுகளாக இயங்காமல் இருந்த பரவிப்பாஞ்சான் அருணோதயா சனசமூக நிலையம், உருத்திரபுரம் சந்திரோதயா உழவர் ஒன்றிய சனசமூக நிலையம், முரசுமோட்டை பாரதி வாசிகசாலை, வட்டக்கச்சிப் பகுதி அருணோதயா, பாரதி கலைவாணி சனசமூக நிலையங்கள் ஆகியவை புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. (55)

மொன்றில் கூறினார்.

திமுகவின் இருபிரிவுகளின் தலைவர்களாக கருதப்பட்ட கோபாலசாமியும் மு.க.விடமிருந்தும் திருநெல்வேலி மாவட்டத்தில் ஒன்றாகவே பொதுக் கூட்டங்களில் கலந்துகொண்டது தி.மு.க. தொண்டர்களை உற்சாகப்படுத்தியது.

மு.க.விடமின் கோசம் 'ராஜீவ் காந்தி கொலைக்கு நமக்கென்ன...

## இலவச கணித, விஞ்ஞான வகுப்புகள் நடைபெறுகின்றன

சித்தன்கேணி கலைநகர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினர் இப்பகுதி மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு இலவச கணித விஞ்ஞான வகுப்புகளை நடத்தி வருகின்றனர்.

கலைநகர் நேருஜி மாதர் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடத்தப்பட்டு வரும் இவ் வகுப்புகளில் பெருந்தொகையான மாணவ மாணவிகள் சேர்ந்து கற்று வருகின்றனர். (18)

● தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

## மாணவர்களையும் பாடசாலைகளையும் மரநடுகையில் ஈடுபடுத்த திட்டம்

சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளில் எதிர்கால சந்ததியினரான மாணவர்களையும், அவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகளையும் ஒன்றிணைக்கும் திட்டம் ஒன்றை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வகுத்துள்ளது.

தெரிவு செய்யப்படும் ஆயிரம் மாணவர்கள் தமக்கு நிர்ணயிக்கப்படும் பொது இடத்தில் ஐந்து மரக்கன்றுகளை நட்டு பராமரிக்க வேண்டும். ஒவ்வொரு மரத்தையும் அடைத்து பராமரிக்க நூறு ரூபா வழங்கப்படும்.

மரங்களை மாணவர்கள் மூன்று வருடங்களுக்கு நீருற்றி பராமரிக்க வேண்டும். இக்காலத்தில் மாதாந்தம் இருபத்தைந்து ரூபா மாணவரின் பெயரில் சேமிப்புக் கணக்கில் வைப்பு செய்யப்படும்.

மரங்களை நட்டு பராமரித்து வளர்த்தெடுப்பதில் முதன்மைபெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்களும், பரிசுகளும் கோட்ட ரீதியில் வழங்கப்படவுள்ளன.

தாமாக முன்வந்து மரங்களை நட்டு வளர்க்கும் மாணவர்களுக்கும் சான்றிதழ்களும், பரிசுகளும் வழங்கப்படவும் உள்ளன.

மாணவர்களை மரம் நடுகையில் ஈடுபடுத்தி மரம் நடுகை திட்டத்தைச் சிறப்பாக செயற்படுத்துகின்ற பாடசாலைகளுக்கு கோட்ட ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும் பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

இத் திட்டங்களின் மூலம் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பரவலாக மரம் நடுகை ஊக்குவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வேண்டுமென்றே சுமத்தப்பட்டவையாகவும் இருக்கலாம்.

'தொண்டர் நிறுவன' நிர்வாக செலவுகள் பயன்பெறு

பிரயோகிக்க வேண்டியது எல்லோரினது சமூகக் கடமையாகும்.

---

## வட்டி அறவீடு; சுலபமான நடைமுறை ஏற்பாடு

நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களின் காரணமாக அரசினால் அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட இரண்டு வகை முற்பணத்துக்குரிய வட்டி அறவிடுவதில் சுலபமான முறை மேற்கொள்ளப்பட இருக்கிறது.

உத்தியோகத்தர்களின் நட்ட ஈடுகளுக்கான விண்ணப்பங்கள் பரிசீலனை செய்து அனுப்பப்பட்டதும் இவர்களுக்கான வட்டியை அறவீடு செய்வதனை யாழ் செயலகம் நிறுத்தி வைத்தது பிழை எனவும் அறவிடப்படாத காலத்துக்குரிய வட்டி முழுமையாக அறவிடப்பட வேண்டும் எனவும் அரசு தெரிவித்தமைக்கமைய கடந்த மாதம் இரண்டு மாதங்களுக்குரிய வட்டி அறவிடப்பட்டது.

இது பொருள்களின் விலை உச்ச நிலையில் இருக்கின்ற இவ்வேளையில் உத்தியோகத்தர்களுக்குக் கடுந்தவான பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பனைச் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து சுலபமான முறையில் இவ் வட்டியை அறவீடு செய்யவும் அரச அதிபர் க. மாணிக்கவாசகர் நடவடிக்கை எடுத்துள்ளார். (25

## மாணவருக்கு மண்ணெண்ணெய்

பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்கம் க.பொ.த. உயர்தர பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு நியாய விலையில் மண்ணெண்ணெயை விநியோகிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 47

## மீளாய்வு செய்வதற்கான படிவங்கள் வந்துள்ளன

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் 1992 ஆம் ஆண்டுக்க, பொ.த. சாதாரணதரப் பரீட்சை விடைத்தாள் பரீட்சகர்களின் விபரங்களை மீளாய்வு செய்வதற்கென '9/சா த/92/01' இலக்கப் படிவத்தினை சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

முன்னர் பரீட்சகர்களாகக் கடமையாற்றியவர்கள் தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இப்படிவத்தினைப் பூரணப்படுத்தி அனுப்ப வேண்டுமென்றும் மேற்படி பரீட்சையில் விடைத்தாள் பரீட்சகர்களாகக் கடமையாற்றக் கூடிய வேறு ஆசிரியர்கள் இருப்பின் அவர்கள் மாதிரிப் படிவத்தினை தயாரித்து பூரணப்படுத்தி அனுப்ப வேண்டுமென்றும் பரீட்சை ஆணையாளர் ஆசரி வெதமுல்ல கேட்டுள்ளார். (18

## பார்ஸிலோனா ஒலிம்பிக் - 92

### பதக்க விவரம்

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| சி. ஐ. எஸ் முன்னாள் சோவியத் குடியரசுகள் | 45 | 38 | 28 |
| அமெரிக்கா | 37 | 34 | 35 |
| ஜேர்மனி | 32 | 21 | 27 |
| சீனா | 17 | 22 | 16 |
| ஹங்கேரி | 11 | 07 | 02 |
| அவுஸ்திரேலியா | 06 | 09 | 09 |
| தென் கொரியா | 10 | 03 | 10 |
| ஸ்பெயின் | 11 | 01 | — |
| போலந்து | 03 | 05 | 06 |
| ஜப்பான் | 03 | 07 | 07 |
| கனடா | 06 | 01 | 06 |
| பிரான்ஸ் | 07 | 05 | 12 |
| இத்தாலி | 05 | 05 | 08 |
| பிரிட்டன் | 04 | 03 | 06 |
| கியூபா | 08 | 03 | 07 |
| துருக்கி | 02 | 02 | 01 |
| பல்கேரியா | 01 | 04 | 01 |
| ருமேனியா | 04 | 05 | 07 |
| செக்கோஸ்லோவேக்கியா | 03 | 02 | 01 |
| இந்தோனேஷியா | 02 | 02 | 01 |
| நோர்வே | 02 | 02 | — |
| எஸ்தோனிய குடியரசு | 01 | — | 01 |
| லிதுவேனியா | 01 | — | — |
| கிரேக்கம் | 02 | — | — |
| சுவீடன் | 02 | 03 | 03 |
| நியூசிலாந்து | 01 | 03 | 03 |
| நெதர்லாந்து | — | 02 | 06 |
| இங்ரேஸ் | — | 01 | 01 |
| பெரு | — | 01 | — |
| லத்வியா குடியரசு | — | 01 | 01 |
| சுயேங்கச (யூகோ) | — | 01 | 02 |
| பெல்ஜியம் | — | 01 | 02 |
| பின்லாந்து | — | — | 01 |
| மொங்கோலியா | — | — | 01 |
| சூரினாம் | — | — | 01 |
| பிரேஸில் | 01 | 01 | — |
| ஜமெய்கா | — | 03 | 02 |
| நமீபியா | — | — | 01 |
| மலேசியா | — | — | 01 |
| ஆஸ்திரியா | — | — | 01 |
| வட கொரியா | 02 | — | 20 |
| டென்மார்க் | — | — | 02 |
| சுலோவேனியாக் குடியரசு | ... | — | 02 |
| பாகிஸ்தான் | — | ... | 01 |
| கானா | ... | ... | 01 |

★ 25 ஆம் ஒலிம்பிக்போட்டிகள்

# ஸ்பானிய கலாசாரத்தை காட்டிய இறுதி நாள் வைபவம்

25 ஆவது ஒலிம்பிக் போட்டிகள் நேற்றுடன் நிறைவெய்தின. இலங்கை நேரப்படி அதிகாலை 1 30 மணியளவில் இறுதிநாள் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

முன்னதாக பார்ஸிலோனா நகரில் இடியுடன்கூடிய பலத்த மழை கொட்டியது.

இறுதிநாள் நிகழ்ச்சியில் வாண வேடிக்கைகளே கண்ணைக் கவரும் வகையில் அமைந்திருந்தன. இருமணி நேரம் நீடித்த இறுதிநாள் வைபவத்தில் ஸ்பானிய கலாசாரத்தை சித்திரிக்கும் கலை மற்றும் இசை நிகழ்வுகள் பார்வையாளர்களை பரவசப்படுத்தின.

26 ஆவது ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் அமெரிக்காவின் அத்லாண்டா நகர் குறித்தும் பெரியதிரை ஒன்றில் படக்காட்சிகள் காண்பிக்கப்பட்டன.

இம்முறை ஒலிம்பிக் சின்னமாக பாவிக்கப்பட்ட கோபி எனப்படும் நாய்க்குட்டியின் உருவத்தை சித்திரிக்கும் அணிவகுப்பும் செய்து காண்பிக்கப்பட்டது.

இதன் பின்னர் கடந்த 14 நாள்களாக சுடர்விட்டெரிந்த ஒலிம்பிக் தீபம் அணைக்கப்பட்டது. ஒலிம்பிக் கொடி இறக்கப்பட்டது.

நிகழ்ச்சியின் இறுதியில் அடுத்த ஒலிம்பிக் போட்டி நடைபெறவுள்ள அமெரிக்க கொடி ஏற்றப்பட்டது.

அமெரிக்க ஜோர்ஜியா மாநில அத்லாண்டா நகரில் 1996 இல் 26 ஆம் ஒலிம்பிக்கில் மீண்டும் சந்திப்போம் என்ற அறிவிப்புடன் 25 ஆம் ஒலிம்பிக் போட்டிகள் நிறைவெய்தின.

## தீவுப்பகுதி பயணம் ஒத்திவைப்பு

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் உதவியுடன் தீவகப் பகுதியைச் சேர்ந்த சில மக்கள் நேற்று தீவுப்பகுதிக்கு செல்லவிருந்த பயணம் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் தீவுப் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தில் 9 இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து தீவுப்பகுதி மக்களை அங்கு கூட்டிச் செல்லும் பயணத்தை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஒத்திப்போட்டுள்ளது.

நேற்றுக் காலை தீவகப் பகுதிக்கு செல்லவிருந்த தீவக மக்கள் பலர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கு வந்து ஏமாற்றத்துடன் திரும்பியதை காணமுடிந்தது. 47

★ கொழும்பு பத்திரிகைகள் கருத்து

## சிங்கள மக்களும் தமது உளத்திடனை இழந்துவிட்டனர்

தமது உளத்திடனை இராணுவத்தினர் மட்டுமல்ல தென்னிலங்கை சிங்கள மக்களும் இழந்துவிட்டனர் என உயர் இராணுவ அதிகாரிகளின் மரணம் தொடர்பாக கருத்து வெளியிட்ட கொழும்பு பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

இராணுவத்துக்கு ஏற்பட்ட இந்த பெரும் அதிர்ச்சியானது புலிகளுக்கு கிடைத்த பெரும் வெற்றி என அரசியல் விமர்சகர் ஜெயதிலக குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்திற்கு எதிரான போரில் புலிகள் மேற்கொண்ட மிகப்பெரும் தாக்குதல் இதுவாகும் என ஏ.எப்.பி. செய்தியாளர் குரும் கருத்து வெளியிட்டுள்ளார்.

## 18 இராணுவத்தினர் இராணுவ நீதிமன்றில்

கடந்த ஆண்டு கொக்கட்டிச்சோலையில் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் விசாரணைக்கு நிறுத்தப்படவுள்ளனர்.

இன்று நடக்கும் இராணுவ

## 'ரெலிகிராப்' பத்திரிகையாளர்கள் யாழ். வந்துள்ளனர்

லண்டன் ரெலிகிராப் பத்திரிகையாளர் ஜோன் அன்ரனும், ஆய்வுக்கட்டுரை நிருபர் டக்ளஸும் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இவர்கள் குறைந்தது ஒரு வாரம் யாழ் நகரில் தங்கியிருந்து இராணுவத்தாக்குதலால் சேதமடைந்த பகுதிகளை வீடியோ படம்பிடித்துக் கொள்வார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

குண்டுவீச்சுக்கு இலக்கான தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தையும் இவர்கள் சென்று பார்வையிட்டதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## வளர்ந்தோர் கல்வித்திட்ட ஆங்கிலப் பயிற்சி நெறி

வளர்ந்தோர் கல்வித்திட்டத்தின் கீழ் ஆங்கில பயிற்சி நெறி ஒன்றினை அச்சுவேலி மகாவித்தியாலயம் ஆரம்பிக்கவுள்ளது. இதில் சேர விரும்புவோர் வயது கட்டுப்பாடு இன்றி விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்படுகின்றது. முன்னுரிமைப்படி சேரும் 40 பேருக்கு மட்டும் பயிற்சி அளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. 73

## வசதிக்கட்டண ஆசிரிய நியமனம் புதுப்பித்தல்

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் கல்விப் பகுதியின் அங்கீகாரம் பெற்று பணிபுரிந்து வரும் வசதிக்கட்டண/பாடசாலை அபிவிருத்திச்சங்க நிதியுதவி பெறும் ஆசிரியர்களுடைய பெயர்ப்பட்டியல் ஒன்றைத் தயாரித்து தமக்கு அனுப்பி வைக்குமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். வி. மகேசவேல் தெரிவித்துள்ளார்.

இந்த ஆசிரியர்களுக்கான இவ்வாண்டுக்குரிய நியமன அங்கீகாரத்தைப் புதுப்பித்துக் கொள்ள அதிபர்கள் கோட்ட நிர்வாக அதிகாரி திரு. எஸ். சபாநாதனுடன் தொடர்பு கொண்டு புதுப்பித்துக் கொள்ளுமாறும் தெரி

## விஜய விமலரட்ண மேஜர் ஜெனரலாகப் பதவியுயர்வு

கண்ணிவெடியில் நேற்று முன்தினம் பலியான இராணுவ அதிகாரிகளுக்கு மரணத்துக்குப் பிந்திய பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட இராணுவத் தளபதி பிரிகேடியர் விஜய விமலரட்ண மேஜர் ஜெனரலாகப் பதவியுயர்வு பெற்றுள்ளார்.

வடபகுதிக் கடற்படைத் தளபதி கொமடோர் ஜயமஹா ரியர் அட்மிரலாக மரணத்துக்குப் பிந்திய பதவியுயர்வு பெற்றுள்ளார்.

## அம்பாறையில் சில கிராமங்கள் அழிக்கப்பட்டுள்ளன

## அழிக்கப்பட்டுள்ளன

அம்பாறையில் சில தமிழ்க் கிராமங்கள் அழிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இக்கிராம மக்கள் அகதிகளாக வெளியேறியதைப் பயன்படுத்தி இக்கிராமங்களை முஸ்லிம்களாலும் சிங்களவர்களாலும் அழிக்கப்பட்டுள்ளன.

மல்வத்தை, வழுகாம்பிட்டி, மல்லிகைத்தீவு, கணபதிபுரம், வீரச்சோலை, சொறிக்கல்முனை ஆகிய கிராமங்களே இவ்வாறு அழிக்கப்பட்டுள்ளன. இங்கு வீடுகள் அனைத்தும் சூறையாடப்பட்டுள்ளன. பல பெரிய மரங்கள் வெட்டி எடுத்துச் செல்லப்பட்டதினால் பாலைவனம் போன்று கிராமங்கள் வெறிச்சோடி உள்ளன.

5 பாடசாலைக் கட்டிடங்களும் இடிக்கப்பட்டுவிட்டன.

## கிளிநொச்சிக்கு மருந்துகள் வவுனியா இராணுவம் தடை

கொழும்பில் கூட்டுப்படைத் தலைமையகத்தின் அனுமதி பெற்று கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்ட மருந்து வகைகளை வவுனியா தடைமுகாம் இராணுவத்தினர் தடுத்துவிட்டனர்.

கடந்த 30 ஆம் திகதி லொறிகள் மூலம் இந்த மருந்துவகைகள் எடுத்துவரப்பட்டபோதே இராணுவத்தினர் அதை தடுத்துவிட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (55)

கடந்த ஆண்டு கொக்கட்டிச்சோலையில் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் கொலைக்கு காரணமான அதிகாரி உட்பட 18 இராணுவத்தினர் இன்று இராணுவ நீதிமன்றத்தில் விசாரணைக்கு நிறுத்தப்படவுள்ளனர்.

இன்று நடக்கும் இராணுவ நீதிமன்ற விசாரணை எவ்வாறு மேற்கொள்ளப்படும் என்று அவதானிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஜெயலலிதாவே வெளியேறு காங்கிரஸ் தீர்மானம்

ஜெயலலிதா அவர் அரசு நடத்தும் சென் ஜோர்ஜ் கோட்டையை விட்டு வெளியேறு என்ற தீர்மானத்தை காங்கிரஸ் தலைவர் ஜி.கே. மூப்பனார் தலைமையிலான இந்திரா காங்கிரஸ் கூட்டம் நிறைவேற்றியுள்ளது.

வெள்ளையனே வெளியேறு என்ற இந்திய சுதந்திரப் போராட்டத்தின் பொன்விழா கொண்டாட்டங்களின் போதே இவ்வாறு ஜெயலலிதாவை வெளியேறு என்ற தீர்மானத்தை தமிழ்நாடு காங்கிரஸ் நிறைவேற்றியுள்ளது.

இது அ.இ.அ.தி.மு.க - காங்கிரஸ் உறவில் விரிசல் அதிகரிப்பதையே எடுத்துக்காட்டுகிறது.

## தாண்டிக்குளம் படையினர் பயணிகள் மீது தாக்கு

வவுனியா தாண்டிக்குளத்தில் தமிழ்ப் பயணிகள் மீது நேற்று முன்தினம் படையினர் மோசமாக தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில தினங்களாக தாண்டிக்குளம் தடை முகாமில் இராணுவக் கெடுபிடி அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது.

வவுனியா நகரினுள்ளும் பொலிஸாரின் சோதனை கெடுபிடிகள் அதிகரித்துள்ளன.

பெயர்ப்பட்டியல் ஒன்றைத் தயாரித்து தமக்கு அனுப்பி வைக்குமாறு பிரதேசக் கலைக்...

### நேற்று...

தாக்குதலையும் மேற்கொள்ளவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை தீவகப் பகுதியை அவ்ரோ விமானம் ஒன்று வட்டமிட்டு சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 47

### கொப்பேகடுவவின்...

இறுதி அஞ்சலி செலுத்த அவரது வீட்டுக்கு வெளியே பெருந்தொகையானோர் கூடி நின்றிருந்தனர்.

கொப்பேகடுவவின் மரணச் சடங்கு இன்று மாலை கனத்தையில் முழு இராணுவ மரியாதையுடன் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. முன்னதாக பிற்பகல் மேஜர் ஜெனரல் விஜய விமலரட்ண, லெப். கொமாண்டர் ஜயந்த பெரேரா, லங்கா திலக ஆகியோரின் மரணச்சடங்குகளும் கனத்தையில் இடம்பெறும்.

இறந்த அனைத்து அதிகாரிகளினதும் மரணச்சடங்குகளும் இன்று நடைபெறுகின்ற போதிலும் பிரிகேடியர் விஜய விமலரட்ணவின் மரணச்சடங்கு புதன்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

செயலாளர் நாயகம் அதிகாரி திரு எஸ். சபாநாயகனுடன் தொடர்பு கொண்டு புதிய பிரதம் கொழும்பு அரசினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. 18

### தேசிய

போது செயற்பட்டு வருகின்றன.

இந்த முயற்சியின் மூலம் பொதுவாகக் காணப்படும் இணக்கத் தீர்வை நடைமுறைப்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும். அரசாங்கம் ஒருதலைப் பட்சமான நடவடிக்கை எதையும் மேற்கொள்ளவில்லை. ஏனென்றால் 1983 இல் ஏற்பட்ட நிகழ்வுகளுக்கு அது வழிவகுக்கும்.

### யாழ்...

தம்மால் கற்பனை செய்யக் கூட முடியவில்லை என மற்றுமோர் அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

அதேசமயம் புலிகளுக்கு எதிரான போரை புதிய அதிகாரிகள் உடனடியாக ஆரம்பிப்பது கடினம் எனவும் இவர்கள் முதலில் வடக்கின் யுத்த நிலைமையை தீவிரமாக கண்டறிய வேண்டியிருக்கும் எனவும் ஏஜென்ஸி செய்திகள் சுட்டிக்காட்டின.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி கலவியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 10-08-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது